செ.வெ.எண் : 07/ஜூன் நாள் : 05.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் வியாபார பெருமக்கள் உணவுப் பாதுகாப்பு துறையில் பதிவு மற்றும் உரிமம் பெற்றிருப்பது கட்டாயமாகும்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

அனைவருக்கும் தரமான மற்றும் பாதுகாப்பான உணவு கிடைப்பதை உறுதிப்படுத்த 05-08-2011 முதல் நகரம், கிராமம் என்ற பாகுபாடு இல்லாமல் இந்தியா முழுவதும் "உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006" நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டம் முன்னதாக நடைமுறையில் இருந்த சட்டத்தில் திருத்தங்களுடன் நடைமுறைக்கு வந்துள்ளன. பழைய சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் வழங்கி வந்த உரிமத்தை புதிய சட்டத்தில் உணவுப் பாதுகாப்புத் துறையே வழங்குகிறது. ஏற்கனவே உணவு வியாபாரிகளுக்கு 05-08-2011 முதல் பதிவு மற்றும் உரிமம் பெறுவதற்காக போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுவிட்டது. ஆகையால் தற்சமயம் உணவு வியாபாரிகள் அவர்களது விற்று கொள்முதல் தொகைக்கேற்ப உரிமம் அல்லது பதிவு பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன்படி உரிமம் அல்லது பதிவு பெற வேண்டிய உணவு உற்பத்தியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் விநியோகஸ்தர்கள், சில்லரை விற்பனையாளர்களான - உணவு எண்ணெய், பேக்கரி, இனிப்பு, பனை வெல்லம், குளிர்பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம், பலகாரங்கள், இனிப்பு, மிட்டாய், முறுக்கு, சிப்ஸ் சோடா கம்பெனிகள், பலசரக்கு கடைகள், அரிசி ஆலைகள், மசால் அரவை நிலையங்கள், உணவு சேமிப்பு கிடங்குகள், மறு பொட்டலமிடுபவர்கள், பால் மற்றும் உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், பால் குளிரூட்டும் நிலையங்கள், பால் கூட்டுறவு கொள் முதல் மற்றும் விற்பனை நிலையங்கள், பால் வியாபாரிகள், உணவுப் போக்குவரத்து வாகனங்கள்

தனியார் மற்றும் அரசு விடுதிகள், தெருக்களில் கூவி உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் நடை மற்றும் சைக்கிள் வியாபாரிகள், கரும்பு சாறு பிழிபவர், காய்கறி, பழங்கள் விற்பவர்கள், பெட்டிக் கடைகள், உணவு விடுதிகள், திருமண மண்டபங்கள், விசேச நிகழ்வுகளுக்கு சமையல் சேவை செய்பவர்கள், குடிநீர் வாகனங்கள், உணவு விடுதிகள், தேநீர் கடைகள், கல்லூரி மற்றும் பள்ளி கேன்டீன்கள், விடுதிகள், உப்பு விற்பனையாளர்கள், கோழி, மீன் மற்றும் ஆட்டு இறைச்சிக் கடைகள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடி மையங்கள், நியாய விலைக்கடைகள், அன்னதானம் வழங்கும் கோயில்கள், தேவாலயங்கள், பள்ளி வாசல்கள் என இலவசமாகவோ அல்லது பாதி விலையிலோ பொது மக்களுக்கு வழங்கினாலோ அல்லது வியாபாரம் செய்தாலோ மொத்தம் மற்றும் சில்லரை உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் அனைத்து வியாபாரிகளும் இத்துடன் உணவுப் பொருட்களை கொண்டு செல்லும் வாகனங்கள் உட்பட அனைவரும் தங்களை / தங்கள் நிறுவனம் மற்றும் வாகன (லாரி, வேன் போன்ற) விபரங்களை தங்கள் பகுதி உணவுப் பாதுகாப்பு அலுவலரிடமோ அல்லது மாவட்ட நியமன அலுவலரிடமோ பதிவு அல்லது உரிமம் பெற தொடர்பு கொள்ளலாம். அபராதம் மற்றும் தண்டனை இன்றி உடனடியாக பதிவு அல்லது உரிமம் பெறவேண்டியது ஒவ்வொரு உணவு வியாபாரியின் கடமை மற்றும் கட்டாயமாகும்.

வருடத்திற்கு பன்னிரண்டு இலட்சத்திற்குட்பட்டு விற்று முதல் செய்பவர்கள் (வருடத்திற்கு ரூபாய் நூறு மட்டும்) செலுத்து சீட்டு (சலான்) மூலம் கருவூலம் தொடர்புடைய வங்கியில் செலுத்தி www.foodlicencing.fssai.gov.in என்ற இணைய தள முகவரியில் தங்களது புகைப்படம், அடையாள அட்டை (அதாவது குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம் போன்றவற்றில் ஏதாவது ஒன்று) மற்றும் உறுதிமொழி படிவம் ஆகியவற்றை பதிவேற்றம் செய்து உணவுப் பாதுகாப்பு அலுவலரிடம் நேரிலோ அல்லது தபாலிலோ சமர்ப்பிக்க வேண்டும். அல்லது அருகிலுள்ள பொது சேவை மையம் (Common Service Centre) மூலம் பதிவேற்றம் செய்து பதிவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம். பதிவு சான்று பெற எடுத்துச் செல்ல வேண்டிய ஆவணங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் இருப்பிட முகவரிக்கான அடையாள அட்டை நகல் (அதாவது குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம் போன்றவற்றில் ஏதாவது ஒன்று), கட்டிட தீர்வை இரசீது, வாடகைக் கட்டிடத்தில் இருப்பவர்கள் வாடகை ஒப்பந்தம் அல்லது மின்கட்டண இரசீது அல்லது தொலைபேசி கட்டண இரசீது, உணவு தயாரிப்பாளர்கள் என்றால் பணியாளர்களுக்கு மருத்துவச் சான்று மற்றும் விற்று முதலுக்கான ஆதாரங்கள் ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

வருடத்திற்கு பன்னிரண்டு இலட்சத்திற்கு மேல் விற்று முதல் செய்து வருபவர்களில் உரிமக் கட்டணமாக சில்லரை விற்பனையாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு (ரூ.2,000/-)ரூபாய் இரண்டாயிரமும், தயாரிப்பாளர்கள் உற்பத்தி, நாள் ஒன்றுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு உட்பட்டதாக இருந்தால் (ரூ.3,000/-)ரூபாய் மூன்றாயிரமும் ஒரு மெட்ரிக் டன்னுக்கு மேற்பட்டதாக இருந்தால் (ரூ.5,000/-) ரூபாய் ஐந்தாயிரமும் செலுத்து சீட்டு (சலான்) மூலம் கருவூலம் தொடர்புடைய வங்கியில் செலுத்தி மேற்கண்ட இணையதள முகவரியில் (www.foodlicensing.fssai.gov.in) தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து பதிவேற்றம் செய்த ஆவணங்கள் மற்றும் விண்ணப்பம் அசல் மற்றும் நகல் இணைத்து மாவட்ட நியமன அலுவலரிடம் நேரிலோ அல்லது தபாலிலோ சமர்ப்பிக்க வேண்டும். உரிமம் பெற விண்ணப்பத்துடன் அடையாள அட்டை நகல் (அதாவது குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம் போன்றவற்றில் ஏதாவது ஒன்று), உணவு தயாரிப்பாளர்கள் மட்டும் தயாரிப்பு கூடத்தின் வரைபடம், கட்டிட தீர்வை இரசீது அல்லது வாடகை ஒப்பந்தம், உள்ளாட்சியிடமிருந்து பெறப்பட்ட தடையில்லா சான்றிதழ் (தேவைப்படும் இடங்களில்), உணவு தயாரிப்பாளர்களின் மருத்துவச் சான்று, பங்கு தாரர்கள் என்றால் பங்குதாரர்கள் ஒப்பந்தம் மற்றும் அடையாள அட்டை நகல், உணவு தயாரிப்பு என்றால் தண்ணீரின் நுண்ணியிரியல் மற்றும் வேதியியல் ஆய்வக அறிக்கை, தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் விபரம், உணவுப் பொருட்கள் விநியோகம் மற்றும் கண்காணிப்பு,

குறைபாடு என்றால் உணவை திரும்பப் பெற திட்ட விபரம், உரிம நிபந்தனைகளுக்கு பொறுப்பேற்கும் நபர், தொழில்நுட்ப தகுதி பெற்ற நபர்கள் விபரம் போன்றவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு காலதாமதமின்றி உடனடியாக அனைத்து உணவு வியாபாரிகளும் பதிவு சான்று அல்லது உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே பதிவு மற்றும் உரிமம் உள்ளவர்கள் தங்களது பதிவு மற்றும் உரிமத்தினை காலாவதியாவதற்கு முன்பே புதுப்பித்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு புதுப்பித்துக் கொள்ளும்பட்சத்தில் அவர்கள் தங்கள் உணவுப்பொருளின் பொட்டலத்தில் அச்சிட்டுள்ள அதே பதிவு மற்றும் உரிம எண் பெறுவதோடு அபராதத்தொகையினையும் தவிர்க்கலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 10,000 ஆயிரம் உணவு வணிகர்களுக்கு மேல் உள்ளனர். கடந்த ஆண்டில் உணவுப் பொருட்கள் வியாபாரம் செய்பவர்களுக்கு 399 உரிமமும் 3806 பதிவு சான்றிதழும் இராமநாதபுரம் உணவுபாதுகாப்பு துறையினரால் வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரையிலும் கலப்பட உணவுப்பொருட்கள் அதாவது பாதுகாப்பற்ற, தரக்குறைவான மற்றும் தப்புக்குறியீடு உள்ள உணவுப் பொருட்களை விற்பனை செய்த வியாபாரிகள் மீது 45 குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தண்டனையும் அபராதத்தொகையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.4,42,000/- அபராதத்தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களும், நுகர்வோர்களும், உணவு விற்பனையாளர்களும், மாணவ மாணவிகளும் தங்களது உணவுப் பொருட்கள் தொடர்பான புகார்களை கட்செவி (வாட்ஸ்அப்) எண் 94440 42322 வாயிலாக தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கப்படும் புகார்களுக்கு உடனடியாக உணவுப்பாதுகாப்பு துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு குறைகள் சரி செய்யப்படுகின்றது.

இதுகுறித்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கும் நியமன அலுவலர், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை, உணவுப்பாதுகாப்பு பிரிவு அலுவலகத்தை 04567 231170 என்ற தொலைபேசி வாயிலாக தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**